
# பரிசுத்த ஆவியானவரின் சகல ஆசீர்வாதங்களோடு
# 2012

*எபே 1:3 நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களில் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்.*

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு ! இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய ராஜ்யத்தின் வசனத்தை கேட்டு, அதை நன்றாக மனதிலாக்கி *( மத் 13:19 ),* அதிலே நிலைத்திருந்து, இயேசுவின் சீஷராக இருந்து, சத்தியத்தை அறிந்து, அறிந்து கொண்ட சத்தியத்தால் விடுதலையாக்கப்பட்டு *( யோவான் 8:31,32 )* ஒவ்வொரு விசுவாசியும் வசனத்தால் வாழ வேண்டும் *( லூக்கா 4:4 );* மற்றவர்களை வாழ வைக்க வைக்க வேண்டும் என்பதே தேவனுடைய சித்தம் *( மாற்கு 16:15-18 ).* இப்படி சத்தியத்தை அறிந்து, அதன் படி வெற்றிகரமாக வாழ விரும்புகிற ஒவ்வொரு விசுவாசியும் வேதாகமத்தை பற்றியதான சில அடிப்படை சத்தியங்களை அறிந்து கொள்ள வேண்டியது மிக அவசியமாகும். அப்படிப்பட்ட ஒரு அடிப்படை சத்தியத்தை இப்போது பார்ப்போம். வேதாகமத்தில் இருக்கின்ற காரியங்களில் பலவற்றையும் கீழ்க்காணும் தலைப்புகளுக்கு உட்படுத்தலாம். அதைப்பற்றியதான ஒரு விளக்க வரைபடத்தை பார்ப்போம்.



மேற்காணும் தலைப்புகளில் இருந்து சில வார்த்தைகளின் விளக்கங்களை பார்ப்போம்.

**1. வாக்குத்தத்தம் ( Promise )** கிரீக்; epangelia. (epi, "upon," angello, "to proclaim, announce").

இவ்வார்த்தையின் மற்றொரு அர்த்தம், **" ஏதாவது ஒன்றை தருவதாகவோ அல்லது செய்வதாகவோ கொடுக்கப்படும் ஒரு உறுதிமொழி".** தேவனுடைய வாக்குத்தத்தம் என்பது, தேவன் தான் செய்வதாக அல்லது கொடுப்பதாக உறுதியாக சொல்லி இருப்பது. தேவனுடைய பல வாக்குத்தத்தங்களும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது. அந்த நிபந்தனைகளை நிறைவேற்றினால் மாத்திரமே அந்த வாக்குத்தத்தங்கள் கிடைக்கும்.

**2. உண்மை ( Fact ).** உண்மை என்பது, தேவன் தான் செய்வதாக அல்லது கொடுப்பதாக சொல்லி, **பின் அதை ஏற்கனவே நிறைவேற்றி இருப்பது.** உண்மைகள் நிபந்தனைகளுக்கு உட்பட்டவை அல்ல. நம்மால் செய்ய முடியாது என்று தெரிந்து, தேவன் தன் கிருபையினால் நமக்காக செய்திருப்பவை.

**3. உடன்படிக்கை. ( Covenant )** தேவனுடைய உடன்படிக்கை என்பது, தேவன் இயேசுவுக்குள் நம்மோடு செய்திருக்கிற ஏற்பாடு. உடன்படிக்கைக்குள் பல வாக்குத்தத்தங்களும் உண்மைகளும் காணப்படலாம்.

உதாரணம். ***உபாகம் 28ம்*** அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கும் **"ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்"** என்பது **வாக்குத்தத்தம்.** அந்த அதிகாரத்தை படிக்கும்போது, இந்த ஆசீர்வாதத்தின் நிபந்தனைகளை நாம் தெளிவாக காணலாம். இந்த நிபந்தனைகளை நிறைவேற்றாவிட்டால் "சாபங்கள்".

ஆனால் ***எபேசியர் 1:3*** ல் சொல்லப்பட்டிருக்கும் **"ஆசீர்வதித்திருக்கிறார்"** என்பது **உண்மை.** இதனோடு நிபந்தனைகள் ஒன்றும் சொல்லப்படவில்லை.

*யோவான் 16:7* ல் *"நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்."* என்பது **வாக்குத்தத்தம்.**
***அப்போஸ்தலர் 2:1-4*** **உண்மை.** இப்பொழுது யார் வேண்டுமானாலும் (இரட்சிக்கப்பட்டவர்கள்) பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்ளலாம்.

ஒரு புதிய வருடத்துக்குள் கடந்து செல்லவிருக்கும் அன்பு சகோதர சகோதரிகள் பலரும் 2011 ம் வருடத்தை பிரச்சினைகளோடு, பாரங்களோடு, துன்பங்களோடு, நோயோடு, வறுமையோடு கழித்திருக்கலாம். இவர்களில் பலரும், தேவன் எனக்கு 2012 ம் வருடத்துக்கான ஒரு நல்ல வாக்குத்தத்தம் தரமாட்டாரா என்று ஜெபத்தோடு ஏங்கிக்கொண்டிருக்கிறார்கள். பல விசுவாசிகளும், 'தேவன் ஏதாவது புதியது செய்ய மாட்டாரா' என்று ஏங்கிக்கொண்டிருக்கிறார்கள். அருமை விசுவாசிகளே *2 பேதுரு 1:3* சொல்லுகிறது, *"தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத்* ***தந்தருளினதுமன்றி,*** இந்த வசனம் சொல்லுகிறது உலகத்தில் வாழுவதற்கும், தேவபக்திக்கும் வேண்டிய யாவும் "தேவனை அறிகிற அறிவினால்" **தந்தருளப்பட்டிருக்கிறது.** இது **உண்மை.** இதே வசனம் தொடர்ந்து சொல்லுகிறது *"2பேது 1:4 இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலேநமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.* இவ்வசனம் **வாக்குத்தத்தங்களை** பற்றி குறிப்பிடுகிறது.

வாக்குத்தத்தங்களில் பலவும் நிறைவேற்றப்படுவதற்கு நம்முடைய முறையான ஜெபம் அவசியமாக இருக்கிறது. ஆனால் **"உண்மை"** அப்படி அல்ல. வேதாகமத்தில் இருக்கிற ஒரு உண்மையை நாம் பெற்றுக்கொள்ள நாம் விசுவாசித்தால் மாத்திரம் போதும்.

ஆகவே, வேதாகமத்தில் இருந்து ஒரு வாக்குத்தத்தத்தை எடுத்துக்கொள்கிறோமா அல்லது ஒரு உண்மையை எடுத்துக்கொள்கிறோமா என்று தெளிவாக மனதிலாக்கிக்கொண்டு, அந்த வேத வசனங்களின் அடிப்படையில் முறையாக **வாக்குத்தத்தத்தையோ** அல்லது **உண்மை**யையோ எடுத்துக்கொள்வது நல்லது. அல்லது வாக்குத்தத்தத்தை உண்மையாகவும், உண்மையை வாக்குத்தத்தமாகவும் எடுத்துக்கொண்டு குழம்பிப்போக நேரிடலாம். தேவன் ஏற்கனவே தந்திருக்கும் ஒன்றை மீண்டும் மீண்டும் அவரிடம் கேட்பது அவரை அவமதிப்பது போல இருக்கும். அது போலவே, தேவன் தன் கிருபையால் வாக்குத்தத்தம் பண்ணாத ஒன்றை எவ்வளவு விசுவாசத்தோடு கேட்டாலும் பெற்றுக்கொள்ள முடியாது.

***Ephes. 1:3*** வசனத்தை இன்னும் சில ஆங்கில வேதாகமங்களில் இருந்து படிப்பது இதன் முறையான அர்த்தத்தை நன்கு மனதிலாக்கிக்கொள்ள உதவியாக இருக்கும்.

***Ephes. 1:3*** *Blessed be the God and Father of our Lord Jesus Christ, who hath blessed us with all spiritual blessings in heavenly places in Christ: (KJV)*

*"May blessing (praise, laudation, and eulogy) be to the God and Father of our Lord Jesus Christ (the Messiah) Who has blessed us in Christ with every spiritual (given by the Holy Spirit) blessing in the heavenly realm!"* ***(AMP)***

*"May the God and Father of our Lord Jesus Christ be eulogized, the One who conferred benefactions upon us in the sphere of every spiritual blessing in the heavenly places in Christ," (**The New Testament: An Expanded Translation by Kenneth S. Wuest** )*

*"Blessed be the God and Father of our Lord Jesus Christ, who has blessed us in Christ with every spiritual blessing in the heavenly places," **(RSV)***

*எபேசியர் 1:3-14* வசனங்கள் **"தேவன் தன் விசுவாசிகளுக்கு செய்திருக்கிற சில மாபெரும் காரியங்களை"** எடுத்துச் சொல்கின்றன. இவை அனைத்தும் **"உண்மைகள்".** தேவன் தன் கிருபையால் நமக்காக செய்திருப்பது. இவற்றை நாம் அடைந்து கொள்ள செய்ய வேண்டியதெல்லாம் *" விசுவாசித்து ஏற்றுக்கொள்வதே ".*

இவற்றில் இருக்கும் ஒரு சிறந்த உண்மை *எபேசியர் 1:3* ***"அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களில் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார் ".*** ஆங்; ***"who hath blessed us with all spiritual blessings in heavenly places in Christ:***

**சகல.**

தமிழ் வேதாகமத்தில் **"சகல ஆசீர்வாதத்தினாலும்"** என்று குறிப்பிடப்பட்டிருக்கும் வார்த்தை, ஆங்கில வேதாகமத்தில் **"all blessings"** என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. **"all"** "**சகல**" என்ற வார்த்தைகளுக்கான கிரேக்க வார்த்தை **"pas"** என்பதாகும். இதன் அர்த்தம் "அனைத்து, எல்லா, முழுவதுமான, அனைத்துவிதமான, எப்பொழுதும், எத்தனை இருக்கிறதோ அத்தனையும், பூரணமாக, எதுவாக இருந்தாலும், யாராக இருந்தாலும், அனுதினமும்

**pas,** *pas*; including all the forms of declension; apparently a primary word; *all, any, every*, the *whole* :- all (manner of, means), alway (-s), any (one), × daily, + ever, every (one, way), as many as, + no (-thing), × thoroughly, whatsoever, whole, whosoever. ( strong's )

**ஆசீர்வதித்திருக்கிறார். Hath blessed.**

புதிய ஏற்பாட்டில் ஆசீர்வதித்திருக்கிறார் என்ற தமிழ் வார்த்தைக்காக உபயோகப்படுத்தப்பட்டுள்ள இரண்டு கிரேக்க வார்த்தைகள், "மக்கரியோஸ். makarios," உதா; *மத் 5:3-11*. இதில் பாக்கியவான்கள் என்ற அர்த்தம் 'ஆவிக்குரிய செழிப்பை' குறிக்கிறது. " "யூலொகெற்றோஸ் eulogetos". உதா ***எபே 1:3.*** இதன் அர்த்தம் "வாழ்த்திப்பேசுவது". நாம் வழக்கமாக தமிழில் 'ஸ்தோத்திரம்' என்ற வார்த்தையை, தேவனை ஆசீர்வதிப்பதற்காக உபயோகப்படுத்துவதுண்டு. அது பெரும்பாலும் வெறும் வார்த்தையாகவே இருக்கும். ஆனால் தேவன் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார் (வாழ்த்திப்பேசுகிறார்) என்றால் அது வெறும் வார்த்தையாக மாத்திரம் இருக்காது. அது வார்த்தையும் செயலும் கலந்தது. **"நாம் தேவனை வார்த்தையாலும் எண்ணத்தாலும் ஆசீர்வதிக்கிறோம், ஆனால் தேவன் நம்மை செயல்களாலும் அதன் நல்ல விளைவுகளாலும் ஆசீர்வதிக்கிறார்.** இந்த, ஆசீர்வதித்திருக்கிறார் என்ற வார்த்தையின் கிரேக்க வார்த்தையின் இலக்கணத்தை பார்க்கும் போது அது "அயோரிஸ்ட்" காலம். அதாவது ஒரு செயல் நடந்து முடிந்து அதன் விளைவுகள் தொடர்ந்து இருப்பதை குறிக்கிறது. அதாவது **தேவன் நம்மை "வார்த்தையாலும் செயல்களாலும் ஆசீர்வதித்திருக்கிறார்" அதன் விளைவுகள் என்றும் தொடர்ந்து இருக்கின்றன.**

**ஆவிக்குரிய சகல ஆசீர்வாதம்.**

அன்புக்குரிய விசுவாசிகள் பலரும் நமக்காக, இக்காலத்துக்கும் எக்காலத்துக்கும் கொடுக்கப்பட்டிருக்கிற இந்த மகா மேன்மையான ஆசீர்வாத வசனத்தை, உண்மையை ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்வது இல்லை. மாறாக எக்காலத்திலேயோ, யாருக்காகவோ கொடுக்கப்பட்ட ஒரு வாக்குத்தத்தத்தை, தங்களுக்காக கொடுக்கப்பட்டுள்ள ஒரு புத்தாண்டின் வாக்குத்தத்தமாக, மாதத்தின் வாக்குத்தத்தமாக, வாரத்தின் வாக்குத்தத்தமாக எடுத்துக்கொள்கிறார்கள். இந்த மகா மேன்மையான ஆசீர்வாத உண்மையை பலரும் ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளாததன் ஒரு காரணம் **"ஆவிக்குரிய சகல ஆசீர்வாதம்"** என்ற வாக்கியத்தில் **"ஆவிக்குரிய spiritual "** என்ற வார்த்தையை தவறாக புரிந்து கொண்டிருப்பது. பல விசுவாசிகளும் 'ஆவிக்குரிய ஆசீர்வாதம்' என்பதை "பௌதீக ஆசீர்வாதத்துக்கு (உலகப்பிரகாரமான சரீரப்பிரகாரமான - physical- ஆசீர்வாதம்) எதிர்மறையான ஆசீர்வாதம்" என்று எடுத்துக்கொள்கிறார்கள். அதாவது மறுபாஷை, வரங்கள், மீட்பு, புத்திர சுவிகாரம், நித்திய ஜீவன், பரலோக ராஜ்யத்தின் பிரஜை போன்ற சில ஆசீர்வாதங்கள் 'மாத்திரம்' என்று.

*எபேசியர் 1:3* **ல் குறிப்பிடப்பட்டுள்ள "ஆவிக்குரிய சகல ஆசீர்வாதம்" என்பதன் சரியான அர்த்தம் "பரிசுத்த ஆவியானவரால் உருவாக்கப்பட்டு அவரால் கொடுக்கப்படுகிற ஆசீர்வாதங்கள்".**

வேதாகமத்தின் படி இந்த அர்த்தம்தான் சரி என்பதை சற்று விளக்கமாக பார்ப்போம். புதிய ஏற்பாட்டில் **'ஆவிக்குரிய'** (Gk;Pneumatikos. Eng;Spiritual) என்ற வார்த்தை சுமார் 18 முறை உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. ***( ரோம-1:10;7:14 ;8:5 1கொரி-2:13; 14 ; 3:1; 12:1; 14:12 15:44; 46; 2கொரி-3:6; 3:8; கலா-6:1; எபே-1:3; கொலோ-1:9. )***

*எபேசியர் 1:3* ல் **"ஆவிக்குரிய"** என்ற வார்த்தைக்கு வேத பண்டிதர்கள் கொடுக்கும் விளக்கங்களை பார்ப்போம்.

"புதிய ஏற்பாட்டில் **Pneumatikos** – **'ஆவிக்குரிய'** என்ற வார்த்தை எப்போதும் " பரிசுத்த ஆவியானவரால் செய்யப்படுகிற கிரியையே " குறிப்பிடுகிறது. ஒரு போதும், இப்போதைய புதிய தவறான கருத்தாகிய 'சரீரப்பிரகாரமானதற்கு எதிர்பதமான ஆவிக்குரியபிரகாரமான' என்பதை மாத்திரமே குறிப்பிடவில்லை". ------- அல்போர்ட் **(Alford)**

"எபேசியருக்கு எழுதப்பட்ட நிருபத்தில் பவுல் அப்போஸ்தலன், பரிசுத்த ஆவியானவர் மனிதனுடைய ஆவிக்கு செய்கிற காரியங்களையே குறிப்பிட்டு எழுகிறார். இங்கே அவர் ஆவிக்குரிய, சரீரப்பிரகாரமான என்று பிரிக்கவில்லை. மாறாக பரிசுத்த ஆவியானவரிடம் இருந்து கிடைக்கின்றவற்றையே குறிப்பிடுகிறார்". ------- **வின்சென்ட்**

" இக்காலத்தில் மனிதரை மறுஜென்ம அனுபவத்துக்குள் சிறிது சிறிதாக கட்டப்படுவதற்கான ஆசீர்வாதங்கள் ".

------W.E.வைன்

"இந்த ஆசீர்வாதங்கள் கிருபையின் ஆசீர்வாதங்கள் என்பதாலும், தெய்வீகமான ஆசீர்வாதங்கள் என்பதாலும், தேவனுக்கும் மனிதனுக்கும் உள்ள நெருங்கிய உறவில் உள்ளவை என்பதாலும், இந்த ஆசீர்வாதங்களை "ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள்" என்று எடுத்துக்கொள்வது நல்லது. இவைகள் தேவனிடம் இருந்து பரிசுத்த ஆவியானவர் மூலமாக நமக்கு வருகின்றன. ஆனால் இங்கே முக்கிய கருத்து இந்த ஆசீர்வாதங்கள் என்ன என்பதே. அவைகள் எவ்வாறு நம்மை வந்து அடைகின்றன என்பது அல்ல. 'பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள உலகப்பிரகாரமான (temporal) ஆசீர்வாதங்களுக்கும், சுவிசேஷத்தின் ஆசீர்வாதங்களுக்கும் உள்ள ஒரு வேறுபாட்டை இந்த வசனம் காண்பிக்கிறது' என்று சொல்வதற்கு போதுமான ஆதாரங்கள் இல்லை. மேலும் இந்த ஆசீர்வாதங்கள், அசாதாரணமான ஆவிக்குரிய வரங்கள், குணமடைதல், அந்நிய பாஷை போன்ற ஆசீர்வாதங்களை மாத்திரமே குறிப்பிடுகின்றன என்று சொல்வதற்கு ஒரு ஆதாரங்களும் இல்லை. இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள **"சகல" (all)** என்ற வார்த்தை இதை நன்கு விளக்கும். ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் என்பது மிகவும் பெரியது, கிருபையினால் நமக்கு கிடைக்கிற நித்திய வாழ்வுக்கான உறுதிமொழி, உயிர்த்தெழுவதற்கான வாக்குறுதி, பரலோக ராஜ்யத்தில் அங்கத்தினராவது, புத்திர சுவிகாரம் போன்ற பல நன்மைகளையும் குறிப்பிடுகிறது."

--------வேதாகம விளக்கவுரையாளர்கள்.

இவ்விளக்கங்களை எல்லாம் சேர்த்து நாம் பார்க்கும்போது, நாம் தெளிவாக மனதிலாக்கிக்கொள்ளலாம், **ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள்** என்பது **"பரிசுத்த ஆவியானவர் மூலமாக கொடுக்கப்படுகிற ஆசீர்வாதங்கள்"**

**உன்னதங்களில்.**

இங்கே, உன்னதங்களில் என்ற வார்த்தை " தேவனுடைய வசிப்பிடத்தை " குறிப்பிடுகிறது. இது நாம் சாதாரணமாக குறிப்பிடுகிற, உயரத்தில் இருக்கிற வானங்கள் அல்ல. அதற்கும் மேற்பட்டதான இடம். தேவன் வசிக்கும் இடம். இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்து பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடம். எபேசியர் நிருபம், பரலோகத்துக்கு ஏறிச்சென்ற இயேசுவின் செயல்களை குறிப்பிடுகிற நிருபம். ஆவிக்குரிய சகல ஆசீர்வாதமும், தேவன் இருக்கும் இடத்தில் இருந்து, இயேசு அரசாளும் இடத்தில் இருந்து வருகின்றவைகள்.

**இந்த ஆசீர்வாதங்களை எல்லாம் உங்கள் வாழ்க்கையில் 2012 ம் வருடத்திலும், வரும் வருடங்களிலும் அனுபவிப்பது எப்படி ?**

இதுவரை நாம் படித்தவற்றில் இருந்து நாம் நன்றாக மனதிலாக்கிக்கொள்ள வேண்டும், இவைகள் அனைத்தும் போராடி, கேட்டு, கெஞ்சி பெற்றுக்கொள்கிறவைகள் அல்ல, மாறாக **கண்டுபிடித்து அனுபவிக்க வேண்டியவைகள்.** இதைப் படிக்கும்போது உங்களுக்கு ஒரு சந்தேகம் வரலாம், அப்படியானால் *மத் 7:7 கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்;* இந்த வசனத்தில் **"கேளுங்கள்"** என்று இயேசு சொல்லியிருக்கிறாரே ? இங்கேதான் நாம் மனதிலாக்கிக்கொள்ள வேண்டும், இதை தொடர்ந்து உள்ள *8-11* வசனங்களில் **ஒரு பிள்ளை தன் பெற்றோரிடம் கேட்பது போல நாம் தேவனிடத்தில் கேட்க வேண்டும்** என்று இயேசு சொல்லுகிறார். 'கேளுங்கள்' என்ற சொல்லின் கிரேக்க வார்த்தை **'aiteo'** இதன் அர்த்தம் **'நமக்கு உரிமையானதை கேட்டு பெற்றுக்கொள்வது ( a *demand* of something due)**. பள்ளியில் இருந்து வரும் பிள்ளை தன் அம்மாவிடம் "அம்மா ! எனக்கு பசிக்கிறது, சாப்பாடு தாருங்கள் என்று கேட்பதை போல. எந்த ஒரு

பிள்ளையும் தன் பெற்றோரிடம் அம்மா, அப்பா தயவு செய்து எனக்கு கொஞ்சம் ஆகாரம் தாருங்கள், புத்தகம் வாங்க பணம் தாருங்கள், என் தலை வலிக்கிறது தயவு கூர்ந்து குணமாக்குங்கள் என்று மண்டியிட்டு கெஞ்சுவது இல்லை. அது போலவே அவர்களை மிரட்டுவதும் இல்லை. நீங்கள் ஒரு வீட்டுக்கு செல்கிறீர்கள், அங்கே ஒரு குழந்தை இது போன்ற காரியங்களுக்காக தன் பெற்றோரிடம் மண்டியிட்டு கெஞ்சிக்கொண்டிருக்கிறதை நீங்கள் பார்த்தால் என்ன நினைப்பீர்கள் ? நிச்சயமாக இந்த வீட்டில் ஏதோ குழப்பம் இருக்கிறது, இந்த பெற்றோர் சரியில்லை, என்று நினைக்க மாட்டீர்களா ?...... **நம் தேவன் நம் பெற்றோரை விட நம்மேல் அன்பு கூருகிறவர் அல்லவா !**

*ரோம 8:32 தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?*

நாம் ஒரு டாக்டரிடம் போய், ஐயா என் உடலில் இருக்கும் ஒரு நோயை குணமாக்குங்கள் என்று சொல்கிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். அதற்கு அவர், என் ஒரே பேறான அன்பு மகனை வேண்டுமானால் உங்களுக்கு தருகிறேன், ஆனால் உங்களது நோயை மருந்து கொடுத்து நான் குணமாக்க மாட்டேன் என்று சொல்வாரா ? கொஞ்சம் யோசித்து பாருங்கள். *ரோமர் 8:32* இப்படி ஒரு கேள்வியைதான் கேட்கிறது. **நாம் கேட்காமலேயே, தன் சொந்த குமாரன் என்று பாராமல் ராஜாதி ராஜா இயேசு கிறிஸ்துவை நமக்காக மகா கொடூரமான முறையில் வேதனைகள் அனுபவித்து மரிக்கும்படியாக கொடுத்த நம் அன்பு பிதா; கொஞ்சம் பணம், குணமடைதல், வல்லமை, ஆவிக்குரிய வரங்கள், ஒரு பிரச்சினையில் இருந்து விடுதலை....... போன்ற சிறிய காரியங்களை தராமல் இருப்பாரா ? இருக்க முடியுமா ?**
ஒரு பிள்ளை தன் வீட்டுக்கு ஓடோடி வந்து, அம்மா எனக்கு சாப்பாடு தாருங்கள் என்று கேட்பது, அந்த பெற்றோர்கள் மேல் அக்குழந்தை வைத்திருக்கும் விசுவாசத்தை காண்பிக்கிறது. என் பெற்றோர் நல்ல பெற்றோர், அவர்கள் எனக்கு வேண்டியவற்றை எல்லாம் வேளா வேளைக்கு சரியாக தயாராக வைத்திருப்பார்கள் என்ற விசுவாசத்தை காண்பிக்கிறது. **அது போலவே நம் 'கேட்பது' இருக்க வேண்டும் என்று இயேசு சொல்லுகிறார்.**

*எபேசியர் 1:3* ல் குறிப்பிடப்பட்டுள்ள 'ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும்' **உண்மையானவைகள்.** நம் முன்னால் இருக்கிற, நம்மால் தொட, பார்க்க, உணர முடிகிற ஒரு பொருளை விட நிஜமானவைகள். நாம் இதை விசுவாசித்து, அந்த விசுவாசத்துக்கு ஏற்ற காரியங்களை செய்யும் போது, இயேசு கிறிஸ்துவின் கோட்பாடுகளோடு ஒத்துழைக்கும்போது, இந்த ஆசீர்வாதங்கள் அனைத்தையும் நம் வாழ்க்கையில் அனுபவிக்க முடியும்.

உதாரணத்துக்கு, **பணத்தேவைகளை** எடுத்துக்கொள்வோம். பல விசுவாசிகளும் பணக்கஷ்டத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தேவன் நம்மை ஆசீர்வதித்திருகிற சகல ஆசீர்வாதங்களில் 'பணமும்' ஒன்று.
***நீதி 10:22*** *கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்.*
***3யோவா 1:2*** *பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்.*
***2கொரி 9:8*** *மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்.*
***2கொரி 8:9*** *நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே.*

இந்த ஆசீர்வாதத்தை 2012 ல் எப்படி அனுபவிப்பது ? தேவனுடைய வார்த்தையை, **உண்மையை** விசுவாசித்து, அந்த விசுவாசத்துக்கு ஏற்ற கிரியைகளை செய்து, இயேசுகிறிஸ்துவின் கோட்பாடுகளுக்கு ஒத்துழைக்கும் போது, நம் பணக்கஷ்டம் தீர்ந்து, மற்றவர்களது பணக்கஷ்டத்தையும் தீர்த்து, தேவனுடைய ஊழியத்துக்கு தாராளமாக கொடுக்கிறவர்களாக இந்த ஆசீர்வாதத்தில் வாழ முடியும்.
***லூக் 6:38*** *கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார்.*

அடுத்து, **குணமடைதலை** எடுத்துக்கொள்வோம். தேவன் நம்மை ஆசீர்வதித்திருக்கிற சகல ஆசீர்வாதங்களில் குணமடைதலும் **(healing)** ஒன்று.

**புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் தலைசிறந்த உண்மைகளில் ஒன்று "*குணமானீர்கள்*".**

***1பேது 2:24*** *நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால்* ***குணமானீர்கள்.*** குணமானீர்கள் என்பது கடந்த காலத்தை குறிக்கிறது. இது நடந்து முடிந்த உண்மை. நாம் உண்மையில் குணமடைதலுக்காக போராட வேண்டியதில்லை, இயேசு நமக்காக பெற்றுத்தந்திருக்கிற சுவுக்கியத்தை சாத்தான் திருடாமல் தக்க வைத்துக்கொண்டால் போதும்.

*யோவா 10:10 திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன். ( 3 யோவான் 1:2, சங் 35:27 )*

இந்த ஆசீர்வாதத்தை 2012 ல் எப்படி அனுபவிப்பது ? தேவனுடைய வார்த்தையை, **உண்மையை** விசுவாசித்து, அந்த விசுவாசத்துக்கு ஏற்ற கிரியைகளை செய்து, இயேசுகிறிஸ்துவின் கோட்பாடுகளுக்கு ஒத்துழைக்கும் போது நாம் பரிபூரண ஆரோக்கியம் என்ற ஆசீர்வாதத்தில் வாழ முடியும். முறையான ஆகாரம், தேவையான தூக்கம், போதுமான அளவுக்கு உடற்பயிற்சி இவற்றோடு பிசாசு ஏதாவது நோய் கொண்டு வரும்போது பிசாசை எதிர்த்து நிற்க வேண்டும். அப்போது அவன் நோயோடு ஓடிப்போவான். *(யாக் 4:7 )* ஒருவேளை இது உடனடியாக எல்லோராலும் முடியாமல் இருக்கலாம்.

சற்று பயிற்சி செய்யும்போது *( எபி 5:14 )* இதை எல்லா விசுவாசிகளாலும் செய்து, ஆரோக்கியமாக வாழ முடியும்.

இது போலவே ஆவியானவரின் மற்ற சகல ஆசீர்வாதங்களையும் நம் வாழ்க்கையில் அனுபவிக்கலாம். ஆசீர்வாதமாக வாழலாம். மற்றவர்களையும் ஆசீர்வதிக்கலாம். ***"அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களில் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார் ".*** இது மாபெரும் உண்மை.

ஆமென்.

**அன்பு சகோதரா, சகோதரி!**

**கடந்த வருடமும், அதற்கு முந்தைய வருடங்களிலும் தேவன் தந்த அளவற்ற ஆசீர்வாதங்களுக்காக உள்ளம் நிறைந்து அவருக்கு நன்றி சொல்வோம்.**
**தேவன் நம்மை ஆவியானவரின் சகல ஆசீர்வாதங்களாலும் ஆசீர்வதித்திருக்கிறார்.**
**இது உன்னதங்களில் இருந்து வருகிற ஆசீர்வாதங்கள்.**
**ஆவிக்குரிய வரங்கள், நித்திய ஜீவன், சமாதானம், சந்தோஷம், செழிப்பு, ஆரோக்கியம், மீட்பு, ஜெபத்திற்கு பதில், ஆவியின் கனி....போன்ற அனைத்தும்.**

**இந்த ஆசீர்வாதங்களை வாழ்க்கையில் அனுபவித்து 2012 லும், வரும் வருடங்களிலும் ஆசீர்வாதமாக வாழுங்கள். மற்றவர்களையும் ஆசீர்வதிக்கிறவர்களாக இருங்கள்.**

**Be blessed.** **You are a blessing.**

**Bro.D.Vergin kumar.**

If you need any clarifications kindly contact me in deeveekumar@yahoo.com Ph; 25572195, 99663557.
Your comments, if they will really edify the body of Christ, are welcome.
**Resources;** Dakes bible commentary, Andrew Wommack bible commentary, Wuest's bible commentary, Amplified bible, Greek Inter linear Bible, Strong's Bible concordance, Vine's expository dictionary of the New Testament words, Wuest's New Testament word studies, New covenant - By Watchman nee …etc. All bible quotes mentioned in group, are from King James Version bible, unless quoted otherwise. In the Tamil bible some verses may be before or after.
(KJV). King James Version. (RSV) Revised Standard Version. (AMP) Amplified Bible.

* * * * * * * * * * * * * *